தினமணி
DINAMANI THAMIZH DAILY

# கோவை வனமரபியல் நிறுவன ஆராய்ச்சியாளருக்கு தேசிய விருது

**கோவை, ஜூலை 17:** கோவை வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தின் முதுநிலை ஆராய்ச்சியாளருக்கு தேசிய வன ஆராய்ச்சி, கல்விக் கழகத்தின் விருது கிடைத்துள்ளது.

கோவையில் உள்ள வனமரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் முதுநிலை ஆராய்ச்சியாளராக சுமார் 20 ஆண்டுகளாகப் பணியாற்றுபவர் சி.எஸ்.கண்ணன். இவர் உப்பு நீரால் பாதிக்கப்படும் நிலப் பகுதிகளில் வளருவதற்கு ஏற்ற மூன்று சவுக்கு மர ரகங்களை (சி.இ. 5, 6, 7) உருவாக்கியுள்ளார்.



சி.எஸ்.கண்ணன்.

வன ஆராய்ச்சியில் 27 ஆண்டுகள் அனுபவம் பெற்றுள்ள சி.எஸ்.கண்ணன், உலக உணவுக் கழகம், ஐக்கிய நாடுகளின் வனப் பணிக் குழுமம் ஆகிய உயர்நிலைக் குழுக்களில் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். யுனெஸ்கோ நிறுவனத்தால் தரப் பகுப்பாய்வு, நிர்வாக அமைப்பியலில் பயிற்சி அளிக்கப்பட்ட இவர், ஆந்திரம், கேரள மாநிலங்களின் வன வளர்ச்சிக் கழகங்களுக்கு ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார். தேசிய வன வளர்ப்புத் திட்ட மதிப்பீட்டுக் குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த கண்ணன், இந்திய தாவரவியல் கழகத்தால் வழங்கப்படும் 'ரோலா எஸ்.ராவ்' தேசிய விருதைப் பெற்றுள்ளார். மேலும், கேரள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 'கலா பிரதீபா' விருதை 5 முறை பெற்றுள்ளார்.

இந்நிலையில் வன ஆராய்ச்சியில் சி.எஸ்.கண்ணனின் பங்களிப்பைப் பாராட்டி, இந்திய வன ஆராய்ச்சி, கல்விக் கழகம் 2019ஆம் ஆண்டுக்கான சிறப்பான வன ஆராய்ச்சிக்கான தேசிய விருதுக்கு இவரைத் தேர்வு செய்துள்ளது. இதற்கான அறிவிப்பு வெளியாகியிருக்கும் நிலையில், டேராடூனில் பின்னர் நடைபெறும் விழாவில் விருதினை நேரில் பெற உள்ளார்.

203. News in Dinamani, Coimbatore, 18.07.2020, National Award of Excellence for Outstanding Research in Forestry.